2018 ஜூலை 9] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2018), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2018) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, ஏற்கெனவே உங்களுடைய கருத்துகளைத் தெரிவித்துவிட்டீர்கள். மேற்கொண்டு கருத்துகளை தெரிவிக்க விரும்புகிறீர்களா? சரி சொல்லுங்கள்.

பிற்பகல் 2–55

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி சாலைகளுக்கு கையகப்படுத்தப்பட்டதுபோக மீதம் இருக்கின்ற நிலங்கள் திரும்ப வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். இதுவரையில் நிலம் கையகப்படுத்தப்படும் பணியினை வருவாய்த் துறை மேற்கொண்டு வந்தது. நஷ்ட ஈடாக 4 மடங்கு நிதி தருவோம் என்று தெரிவித்தார்கள். சேலம் 8 வழி பசுமை சாலை அமைக்கும் திட்டத்தில் கையகப்படுத்தப்படும் நிலங்களிலுள்ள தென்னை மரத்திற்கு 50,000 ரூபாய் நஷ்ட ஈடாக வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். புதிதாக தற்போது ஒன்றுமே கிடையாது; நிலத்தைக் கொடுத்ததற்கு F.S.I.–படி ஒரு பேப்பர்தான் தரப்போகிறோம் என்று சொல்கிறார்கள். ஏழை, எளிய மக்களுக்கு அந்த காகிதம் பயன்படக்கூடியதாக இருக்காது. அதேபோல, தமிழ்நாடு முழுவதும் பார்க்கின்றபொழுது, வருவாய்த் துறையின் அதிகாரம் பறிக்கப்படுகின்றது. DTCP–ல் அந்த அளவிற்கு manpower இருக்கிறதா என்று தெரியாது. அந்த அளவிற்கு manpower இல்லாமல் இதை ஆய்வு செய்வதே கஷ்டம்.

அடுத்து, நான் ஏற்கெனவே தெரிவித்த கருத்துகளுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. 20 அடி சாலையில் இத்திட்டத்தைக் கொண்டுவர முடியுமா

@ 9–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2018 ஜூலை 9] [திரு. எஸ். ரகுபதி]

அல்லது ஏற்கெனவே இருக்கும் விதிமுறைகள் பயன்படுத்தப்படுமா அல்லது இதற்காக விதிமுறைகளைப் புதிதாகக் கொண்டுவரப்போகிறீர்களா? யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், இஷ்டப்படி கட்டடங்கள் கட்டிக்கொள்ளலாம் என்று சொல்லி, அனுமதி கொடுக்கப்போகிறார்களா என்பன போன்ற சந்தேகங்களெல்லாம் இன்றைக்கு மக்களுக்கு இருக்கின்ற காரணத்தால், இந்தச் சட்டமுன்வடிவை வேண்டாம் என்று பொதுவாகவே எல்லோருமே கருதுகிறார்கள்; அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படுத்தியிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவு இன்றைய சூழ்நிலையில் தேவையில்லாத ஒரு சட்டமுன்வடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சில விளக்கங்களை நான் இங்கு சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். FSI வழங்குவது கட்டாயம் அல்ல. அது நில உரிமையாளர்களின் விருப்பத்தின்பேரில்தான் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், TDR என்கிற முறையை எங்கு பயன்படுத்தினாலும், அந்த இடத்திற்குப் பொருந்தும் விதிகளின்படிதான் கட்டடம் கட்டப்படும். ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிடும்போது, இரு இடங்களிலும் உள்ள நில மதிப்பீட்டின்படி முறைப்படுத்தப்படும். அதன்படி, அண்ணா சாலையில் பயன்படுத்தும்பொழுது கட்டட விதிப்படிதான் அவை குறைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) தமிழ்நாடு வனத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2018), மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

@ 11–6–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.